விடுதலைப் போராட்ட வீரர்

# எஸ்.எஸ்.இராமசாமி படையாட்சியார் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் மலர்தூவி மரியாதை!

சென்னை, செப். 16 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், விடுதலைப் போராட்ட வீரர் எஸ்.எஸ்.இராமசாமி படையாட்சியார் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், விடுதலைப் போராட்ட வீரர் எஸ்.எஸ். இராமசாமி படையாட்சியார் அவர்களின் 108வது பிறந்த நாளை முன்னிட்டு, 16.9.2025 அன்று காலை 10.00 மணியளவில் சென்னை, கிண்டி, ஹால்டா சந்திப்பில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

எஸ்.எஸ். இராமசாமி படையாட்சியார் அவர்கள் தென் ஆற்காடு மாவட்டம், கடலூரில் 1918ஆம் ஆண்டு செப்டம்பர் 16ஆம் நாள் சிவசிதம்பரம் படையாட்சி - ரெத்தினம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். இளமையில் படிப்பிலும், விளை யாட்டிலும் ஆர்வம் உள்ளவராக விளங்கினார். அந்தக் காலத்தில் இன்டர்மீடியட் வரை கல்வி பயின்றார்.

இராமசாமி படையாட்சியார் அவர்கள், 1950ஆம் ஆண்டு தொடக்கத்தில் தென்னாற்காடு மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டார். இளம் வயதிலேயே சமுதாயப் பணியில் நாட்டம் கொண்டதன் விளைவாக, தமது 24வது வயதில் கடலூர் நகராட்சியில் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அடுத்த நான்கு ஆண்டுகளில் நகராட்சித் தலைவராகவும் தேர்வு பெற்றார். மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க இவர் குடிநீர் திட்டம் கொண்டு வந்தார்.

தமது 60 ஆண்டுகள் பொதுவாழ்வில் மூன்று முறை சட்டமன்ற உறுப்பினர், இரண்டு முறை மேலவை உறுப்பினர், இரண்டு முறை நாடாளுமன்ற உறுப்பினர், தமிழ்நாடு அரசின் அமைச்சர் எனப் பல்வேறு பொறுப்புகளிலும் மக்கள் பணியாற்றினார். இராமசாமி படையாட்சியார் அவர்களின் வேண்டுகோளின் பேரில் 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு முதலாம் பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு என்ற அமைப்பை ஏ.என். சட்டநாதன் என்பவரைத் தலைவராக கொண்டு அமைத்தார். குழு வழங்கிய பரிந்துரையின் அடிப்படையில் பிற்படுத்த ப்பட்டோருக்கும் தாழ்த்தப்பட் டோருக்கும் வழங்கப்பட்ட இடஒதுக்கீடுகள், உயர்த்தி வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

இராமசாமி படையாட்சியார் அவர்கள் நினைவைப் போற்றும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சென்னை மாநகரின் நுழைவாயிலான கிண்டியில் இராமசாமி படையாட்சியார் அவர்களின் கம்பீரச் சிலையை நிறுவி 21.2.2001 அன்று திறந்து வைத்தார்கள். மேலும், அவரது பிறந்த நாளான செப்டம்பர் 16 அன்று தமிழ்நாடு அரசின் சார்பில் அரசு விழாவாகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன்படி, இந்த ஆண்டில் விடுதலைப் போராட்ட வீரர் எஸ்.எஸ். இராமசாமி படையாட்சியார் அவர்களின் 108வது பிறந்த நாள் நிகழ்ச்சியில், முதலமைச்சர், துணை முதலமைச்சர், அமைச்சர் பெருமக்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின் றனர்.

# தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம்!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் உறுதிமொழி!

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (15.9.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில் ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தின் சார்பில் எடுக்கப்பட்ட உறுதிமொழி.

**உறுதிமொழி**

- ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தில் இணைந்துள்ள ஒரு கோடி குடும்பத்தினரும் சேர்த்து தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம் என உறுதியேற்கிறோம்.
- நான், தமிழ்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் விகிதாசாரத்தைக் குறைக்கும் நியாயமற்ற தொகுதி மறுவரையறைக்கு எதிராகப் போராடுவேன். தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் என உறுதியேற்கிறேன்.
- நான், வாக்காளர் பட்டியல் மோசடி மூலம் தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பறிக்கும் SIRக்கு எதிராக நிற்பேன். தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் என உறுதியேற்கிறேன்.
- நான், நீட் மற்றும் இளைஞர்களை முடக்கும் எந்தவொரு திட்டத்தையும் எதிர்த்து நிற்பேன், நம் மாணவர்களுக்கு உரிய கல்வி நிதிக்காகப் போராடுவேன். ஒருபோதும் தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் என உறுதியேற்கிறேன்.
- நான், தமிழ் மொழி, பண்பாடு மற்றும் பெருமைக்கு எதிரான எந்தவொரு பாகுபாட்டையும் எதிர்த்துப் போராடுவேன். எதற்காகவும் தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் என உறுதியேற்கிறேன்.
- நான், பெண்கள் விவசாயிகள் மீனவர்கள்நெசவாளர்கள்தொழிலாளர்கள் என ஒவ்வொரு உழைக்கும் வர்க்கத்தின் நலன்களையும் பாதுகாக்கத் தேவையான நிதிக்காகப் போராடுவேன். தமிழ்நாட்டைதலைகுனிய விடமாட்டேன் என உறுதியேற்கிறேன்.

பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை :

# அன்புக் கரங்கள் திட்டம்! முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, செப். 16 -**

**பெற்றோரை இழந்த குழந்தைகளை அரவணைத்து தொடர்ந்து பாதுகாத்திடும் வகையில் அக்குழந்தைகள் 18 வயது வரையிலான பள்ளிப் படிப்பு முடியும் வரை இடைநிற்றல் இன்றி கல்வியை தொடர மாதம் ரூ.2,000 உதவித்தொகை வழங்கிடும் "அன்புக்கரங்கள்" திட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.9.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில், பெற்றோர்கள் இருவரையும் இழந்த மற்றும் பெற்றோரில் ஒருவரை இழந்து, மற்றொரு பெற்றோரால் பராமரிக்க இயலாத குழந்தைகளை அரவணைத்து தொடர்ந்து பாதுகாத்திடும் வகையில், அக்குழந்தைகளின் 18 வயது வரையிலான பள்ளிப் படிப்பு முடியும் வரை இடைநிற்றல் இன்றி கல்வியை தொடர மாதம் 2,000 ரூபாய் உதவித்தொகை வழங்கிடும் "அன்புக்கரங்கள் திட்டத்தை தொடங்கி வைத்து, அக்குழந்தைகளுக்கு உதவித் தொகையினை வழங்கினார்.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் ஒரு அங்கமான குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் இயக்குநரகம், இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015இன் கீழ் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளின் மறுவாழ்விற்காக நிறுவனம் மற்றும் நிறுவனம் சாரா சேவைகளை வழங்கி வருகிறது.

தமிழ்நாடு அரசின் "தாயுமானவர் திட்டம் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, உலகளாவிய சகோதரத்துவம் என்ற கொள்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. மிகவும் வறுமையில் வாழும் குடும்பங்களை அடையாளம் கண்டு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, பெற்றோர்கள் இருவரையும் இழந்த மற்றும் பெற்றோரில் ஒருவரை இழந்து மற்றொரு பெற்றோரால் பராமரிக்க இயலாத குழந்தைகளை அரவணைத்து தொடர்ந்து பாதுகாத்திடும் வகையில், அக்குழந்தைகளின் 18 வயது வரையிலான பள்ளிப் படிப்பு முடியும் வரை இடைநிற்றல் இன்றி கல்வியை தொடர, "அன்புக்கரங்கள் என்ற திட்டத்தின் மூலம் மாதம் 2,000 ரூபாய் உதவித்தொகை வழங்கப்படும். பள்ளிப்படிப்பு முடித்தவுடன் கல்லூரிக் கல்வி மற்றும் உரிய திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் அவர்களுக்கு வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பினை தொடர்ந்து, "அன்புக்கரங்கள் திட்டத்தை செயல்படுத்த கைப்பேசி செயலி (Mobile App) உருவாக்கப்பட்டு தமிழ்நாடு மின் ஆளுமை நிறுவனத்தின் மூலம் பெறப்பட்ட விவரங்கள், மக்கள் குறைத் தீர்க்கும் நாள், உங்களுடன் ஸ்டாலின் முகாம், மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலரிடம் பெறப்பட்ட விண்ணப்பங்களை கள ஆய்வு செய்து முதற்கட்டமாக 6,082 குழந்தைகள் தமிழ்நாடு அரசின் நிதி உதவியினை மாதம் தோறும் பெற உள்ளனர்.

இக்குழந்தைகளுக்கு நிதியுதவி வழங்கும் "அன்புக்கரங்கள் திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் தொடங்கி வைத்தார். மேலும், பெற்றோர் இருவரையும் இழந்து 12ஆம் வகுப்பு முடித்து, பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களில் தமிழ்நாடு அரசின் முயற்சியால் சேர்க்கப்பட்டுள்ள 1,340 மாணவ / மாணவியர்களுக்கு மடிக்கணினிகளையும் வழங்கினார்.

முன்னதாக, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பாக அமைக்கப்பட்டுள்ள அரங்கினையும், மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளையும் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் இ. பரந்தாமன், தாயகம் கவி, துணை மேயர் மு. மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அரசு செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளீதரன், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் இயக்குநர் (மு.கூ.பொ) திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், சமூகநல இயக்குநர் திருமதி எம்.எஸ். சங்கீதா, தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள் உறுப்பினர் செயலர் இரா. சுதன், (ப.நி.) மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வக்பு வாரிய திருத்தச் சட்டம்: உச்ச நீதிமன்ற உத்தரவு

# இஸ்லாமியர்களின் உரிமைகளை பாதுகாக்கும் விதத்தில் உள்ளது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கருத்து!

சென்னை, செப். 16 –

"வக்பு வாரிய திருத்தச் சட்டம் குறித்த உச்சநீதிமன்றத் தீர்ப்பு, இஸ்லாமியர்களின் உரிமைகளை பாதுகாக்கும் விதத்தில் உள்ளது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.

இது குறித்து முதல்வரின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**தி.மு.க.வும் மற்ற மனுதாரர்களும் வக்பு திருத்தச் சட்டத்துக்கு எதிராகத் தொடர்ந்த வழக்கில், ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டு வந்துள்ள முக்கியத் திருத்தங்களுக்குத் தடை விதித்து மாண்பமை உச்சநீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.**

**1) வக்புக்குச் சொத்தை அளிக்க, 5 ஆண்டு இஸ்லாத்தைக் கட்டாயமாக நடைமுறையில் கடைப்பிடித்திருக்க வேண்டும் எனும் விதிக்குத் தடை**

**2) வக்பு நிலத்தை அரசு நிலம் என்று ஒரு குற்றச்சாட்டு எழுந்தாலே, உரிய அதிகாரி அறிக்கை அளிக்கும்வரை அல்லது அரசு முடிவெடுக்கும் வரை அச்சொத்தைப் பறிக்கும் அதிகாரத்துக்குத் தடை**

**3) 'வக்பு பயனர்' என்பதை நீக்கும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கான அதிகாரத்துக்குத் தடை (நீண்டகால மதப் பயன்பாட்டின் அடிப்படையில் வக்பு சொத்துகளாகக் கருதப்படும் சொத்து)**

**4) மத்திய வக்பு வாரியத்தில் நான்குக்கும் மேற்பட்ட முஸ்லீம் அல்லாதோரை சேர்ப்பது, மாநில வக்பு வாரியங்களில் மூன்றுக்கும் மேற்பட்ட முஸ்லீம் அல்லா தோரைச் சேர்ப்பதற் குத் தடை. இதனால், இந்த வாரியங் களில் முஸ்லீம்கள் பெரும் பான்மை யாக இருப்பது உறுதிசெய் யப்படும்.**

**ஒன்றிய பா.ஜ.க. அரசு அரசியலமைப்புச் சட்டத்துக்கு எதிராக, சட்ட விரோதமாகச் செய்துள்ள திருத்தங்களை நீக்குவதை நோக்கிய முக்கிய நகர்வாக இன்றைய நீதிமன்ற உத்தரவு அமைந்துள்ளது.**

**இந்த சட்டத்திருத்த முன்வரைவு நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப் பட்டதில் இருந்தே, தி.மு.க. இதனைத் தொடர்ச்சியாக எதிர்த்து வந்துள்ளது. இதனை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ள பலரோடு சேர்ந்து வெற்றியும் கண்டுள்ளது. தி.மு.க. தலை மையிலான தமிழ்நாடு அரசும் ஒன்றிய அரசு வக்பு திருத்தச் சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டும் என வலியுறுத்திச் சட்ட மன்றத் தில் தீர்மானம் நிறைவேற்றி, ஆட்சி அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தும் பா.ஜ.க. வின் முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்தது.**

**இந்நிலையில், இன்றைய உத்தரவு இஸ்லாமியர்களின் மத உரிமைகளையும் அடிப்படை உரிமைகளையும் அரசியல மைப்புச் சட்டத்தையும் மாண்பமை உச்ச நீதிமன்றம் பாதுகாக்கும் என மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை வலுப்படுத்தும் விதத்தில் அமைந்துள்ளது.**

**இவ்வதறு முதல்வர் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.**

வக்பு வாரிய

# சட்டத் திருத்தத்தில் முக்கிய விதிகளுக்குத் தடை!

## உச்ச நீதிமன்றம் உத்தரவு!




புதுடெல்லி, செப். 16 –

வக்ஃப் வாரிய சட்ட திருத்தத்தின் முக்கிய விதிகளுக்கு தடை விதித்து உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பையும் மீறி, வக்ஃப் சட்டத்திருத்தத்தை ஒன்றிய அரசு நிறைவேற்றியது. இதனை எதிர்த்து திமுக, காங்கிரஸ் உள்ளிட்ட அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகள் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தன. வழக்கு விசாரணை நிறைவடைந்த நிலையில், தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் தலைமையிலான அமர்வு, வக்ஃப் வாரிய சட்ட திருத்தத்தின் முக்கிய விதிகளுக்கு தடை விதித்து இடைக்கால உத்தரவை பிறப்பித்துள்ளது.

இதன்படி, வக்ப் வாரியத்திற்கு தானம் வழங்க 5 ஆண்டுகள் இசுலாம் மதத்தை பின்பற்ற வேண்டும் என்ற விதிக்கு தடை விதிக்கப்படுவதாகவும், ஒருவர் இஸ்லாம் மதத்தை பின்பற்றுபவரா என்பதை தீர்மானிப்பது தொடர்பாக விதிகளை மாநில அரசுகள் உருவாக்கும் வரை இந்த பிரிவு நிறுத்தி வைக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட குடிமக்களின் சொத்துக்கள் மீது முடிவெடுக்கும் உரிமை மாவட்ட ஆட்சியருக்கு அதிகாரம் அளிக்கும் விதிக்கும் தடை விதிக்கப்பட்டுன் ளது. 11 பேர் கொண்ட வக்ஃப் வாரியத்தில் 3 பேருக்கு மேல் முஸ்லிம் அல்லாத உறுப்பினர்கள் இருக்கக்கூடாது என்றும், 20 பேர் கொண்ட குழுவில் 4 பேருக்கு மேல் இசுலாமியர்கள் அல்லாதவர்களை நியமிக்க கூடாது என்றும் உத்தரவிட்ட நீதிபதிகள், முழு சட்டத்துக்கும் தடை விதிக்க முடியாது என்றும், சில பிரிவுகளுக்கு மட்டும் தடை விதிப்பதாகவும் தெரிவித்தனர். வழக்குகளில் உள்ள வக்ப் சொத்துக்களில் இறுதி தீர்ப்பு வரும் வரை வக்ஃப் சொத்தின் அந்தஸ்தை மாற்றக்கூடாது என்றும் நீதிபதிகள் உத்தரவிட்டனர். தற்போதைய இடைக்கால தீர்ப்பின்படி வக்ஃப் சொத்து என்று அரசு அதிகாரி முடிவு செய்தால் அதனை வக்ஃப் தீர்ப்பாயத்திலும், பின்னர் உயர் நீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்யலாம் என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

அறிவார்ந்த சமுதாயத்தை உருவாக்குவதே இலட்சியம்!

# அண்ணா நூற்றாண்டு நூலகம் திறக்கப்பட்ட நாள் இன்று!

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி எக்ஸ் தளப் பதிவு!

*சென்னை, செப். 16 -*

*பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியின் X தளம் பதிவு வருமாறு: முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அண்ணா நூற்றாண்டு நூலகம் திறக்கப்பட்ட நாள் இன்று!*

**56.5 இலட்சம் பார்வையாளர்கள்!**

*70.38 இலட்சம் புத்தகங்களுடன் தலைநிமிர்ந்து நிற்கும் அண்ணா நூற்றாண்டு நூலகம் வாசகர்கள் எழுத்தாளர்கள் மாணவர்களின் அறிவு சரணாலயமாகத் திகழ்வதில் பெருமை அடைகிறோம்.*



*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் தமிழ்நாடு முழுவதும் மாபெரும் நூலகங்களை அமைத்துவருகிறது முதலமைச்சர் அவர்களின் 'திராவிட மாடல்' அரசு! அறிவார்ந்த சமுதாயத்தை உருவாக்குவதுதான் திராவிட இயக்கத்தின் கொள்கை! இலட்சியம்!*

*இவ்வாறு அவர் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.*



திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், பேரறிஞர் அண்ணா அவர்களின் 117வது பிறந்த நாளை முன்னிட்டு, அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, ஒருபோதும் தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் என்று, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் கழகத்தினர் உறுதிமொழி ஏற்றனர். உடன் சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, எம்.எஸ்.தரணிவேந்தன்.எம்.பி., டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை.எம்.பி., மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், இரா.ஸ்ரீதரன், எஸ்.பன்னீர்செல்வம், ப.கார்த்திவேல்மாறன், பிரியாவிஜயரங்கன் உட்பட பலர் உள்ளனர்.

பேரறிஞர் அண்ணா 117வது பிறந்தநாள் விழா

# செங்கல்பட்டு நகரில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு மரியாதை!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் - கழகத்தினர் திரண்டு நின்று உறுதிமொழி ஏற்பு

*செங்கல்பட்டு, செப். 16-*

*பேரறிஞர் அண்ணா அவர்களின் 117வது பிறந்தநாளையொட்டி செங்கல்பட்டு நகரில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவச் சிலைக்கு அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம் உள்ளிட்ட கழகத்தினர் அண்ணா சிலை முன்பு திரண்டு நின்று உறுதிமொழி ஏற்றனர்.*

*பேரறிஞர் அண்ணா அவர்களின் 117வது பிறந்த நாளை யொட்டி செங்கல்பட்டு நகரில் மணிக்கூண்டு அண்ணா திருவுருவச் சிலைக்கு மாலையணிவிக்கும் நிகழ்ச்சி வெகு கோலாகலமாக நடைபெற்றது.*

*செங்கல்பட்டு பழைய பேருந்து நிலையம் அருகில் இருந்து செங்கல்பட்டு நகர கழகத்தினர் காஞ்சி வடக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள் தலைமையில் ஊர்வலமாக புறப்பட்டு வந்தனர்.*

*செங்கல்பட்டு மணிக்கூண்டு வரை நடந்து வந்த அவர்கள் அங்குள்ள அண்ணா சிலையை அடைந்தனர். அமைச்சர் தா.மோ. அன்பரசன் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து வணங்கி மரியாதை செலுத்தி உறுதிமொழியை வாசித்தார். கழகத்தினர் அனைவரும் அண்ணா சிலை முன்பு உறுதிமொழியை ஏற்றனர்.*

*காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், மாவட்ட துணைச் செயலாளர் து.மூர்த்தி, செங்கல்பட்டு நகரச் செயலாளர் எஸ்.நரேந்திரன், நகர மன்றத் தலைவர் தேன்மொழி நரேந்திரன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கே.மணிகண்டன், கழக அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் எஸ்.திருவள்ளுவன், கே.சி.சந்தியா, கே.ஜி.சந்தோஷ் கண்ணன், நகர நிர்வாகிகள் அம்பிகா சேட்டு, ஏகாம்பரம், பிரதர் முனுசாமி, ஆனந்தன், எஸ். ராஜி, சுரேஷ் சிவா உள்ளிட்டோர் திரளாக பங்கேற்றனர்.*